**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.22/2010**

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 நெடுவேல், வயது 46, த/பெ கோட்டீஸ்வரன்**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கை யார் முதலில் தாக்கல் செய்தார்கள் என்றால் 1ம் வாதி கோட்டீஸ்வரன் தாக்கல் செய்தார். மேற்படி 1ம் வாதி இறந்த பிறகு 2 முதல் 5 வரையான வாதிகள் மேற்படி 1ம் வாதியின் வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 1ம் வாதி கோட்டீஸ்வரன் அவரது தந்தை முனுசாமியின் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் சார்பாக இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி முனுசாமி எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. முனுசாமியின் வாரிசுதாரர்கள் யார் என்றால் 1. தர்மராஜன், 2. லட்சுமணன், 3. தியாகராஜன், 4. கோட்டீஸ்வரன், 5. பார்த்தீபன், 6. கண்ணகி ஆகியோர்கள் ஆவர். இவ்வழக்கை தாக்கல் செய்த போது யார் யார் உயிருடன் இருந்தார்கள் என்றால் கோட்டீஸ்வரன், தியாகராஜன், பார்த்தீபன், கண்ணகி ஆகியோர் உயிருடன் இருந்தார்கள். மேற்படி இறந்த தர்மராஜன் மற்றும் லட்சுமணனுக்கு வாரிசுதாரர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். மேற்படி நபர்கள் என் தந்தை கோட்டீஸ்வரனுக்கு இவ்வழக்கை தொடர கூட்டு குடும்பம் சார்பாக எழுத்து மூலம் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை.

3. மேற்படி என் தந்தையும் மேற்படி விவரங்களை வாதுரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை. ஆகையால் கூட்டு குடும்ப உறுப்பினர்களின் அனுமதியில்லாமல் என் தந்தை இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. குடும்ப உறுப்பினர்களாகிய பார்த்தீபன், கண்ணகி, தியாகராஜன் ஆகியோர்களை கேட்டால்தான் தெரியும். இவ்வழக்கை தாக்கல் செய்த போது என் தந்தை என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறியதன் அடிப்படையில் என் தந்தை வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4. வாதிகள் 2 முதல் 5 வரையான நாங்கள் என் தந்தை 1ம் வாதி கோட்டீஸ்வரனின் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வாதுரையில் பரிகாரம் பத்தியில் உள்ள முதல் பரிகாரம் தாவா சொத்து வாதியின் கூட்டு குடும்ப சொத்து என விளம்புகை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி வா.சா.ஆ.1 தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

5. முனுசாமி என்பவர் அய்யன்ன நயினார் என்பவரிடமிருந்து 11.11.1949 அன்று கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி முனுசாமி என்பவர் தாவா சொத்தை அவருடைய சுய வருமானத்திலிருந்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் ஆவணம் 1949ம் வருடத்தில் ஏற்பட்டது என்பதால் எனக்கு மேற்படி விவரங்கள் தெரியவில்லை. 1949ம் ஆண்டு முனுசாமியின் கூட்டு குடும்ப உறுப்பினர்களாக யார் யார் இருந்தார்கள் என்றால் சகாதேவன் கவுண்டர் என்பவர் இருந்தார்.

6. சகாதேவன் கவுண்டர் இறந்து தற்போது அவரின் வாரிசுதாரர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.